**எண்டோ சல்பானுக்கு அனுமதி இல்லை: அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன்**

First Published : 17 Aug 2011 01:56:12 AM IST



சென்னை, ஆக. 16: பூச்சிக்கொல்லி மருந்தான எண்டோசல்பானுக்கு தமிழகத்தில் அனுமதி இல்லை என்று வேளாண் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் அறிவித்தார்.

சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் (சிதம்பரம்) பேசினார். அப்போது, சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் எண்டோசல்பான் பூச்சிக் கொல்லி மருந்துக்கு கேரள உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தமிழகத்திலும் தடை விதிக்க வேண்டும் என்றார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், தமிழகத்தில் எண்டோசல்பானை இருப்பு வைக்கவோ, விற்கவோ கூடாது என்றார்.

**வேளாண்மைத் துறையை சீரமைக்க வேண்டும்**

First Published : 17 Aug 2011 01:13:11 AM IST

சென்னை, ஆக. 16: கடந்த ஆட்சியில் சீரழிக்கப்பட்ட வேளாண்மைத் துறையை சீரமைக்க வேண்டும் என்று தேமுதிக மற்றும் இடதுசாரி கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் கோரிக்கை விடுத்தனர்.

சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இது குறித்து அவர்கள் பேசியது:

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் (சிதம்பரம்): கடந்த தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வேளாண்மைத் துறை சீரழிந்தது. இது குறித்து தி.மு.க.வினரிடம் விளக்கம் கேட்கலாம் என்றிருந்தேன். அதனைப் புரிந்து கொண்டு முன்னதாகவே அவர்கள் வெளியேறிவிட்டார்கள்.

வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கு மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும் மத்திய அரசு நந்தி போல குறுக்கே நின்று கொண்டு அதனை நீர்த்துப்போகச் செய்துவிடுகிறது.

மத்திய அரசு உர மானியத்தை குறைத்துள்ளது. உரங்களின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் மத்திய உரத் துறை அமைச்சராக இருப்பது வெட்கக்கேடு. பட்டு இறக்குமதியால் உள்நாட்டு பட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு தனது நடவடிக்கைகளால் தமிழக விவசாயிகளை ஓட்டாண்டியாக்கி வருகிறது. எனவே, மத்திய அரசை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராட வேண்டும்.

தமிழகத்தில் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகளின் விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. இதற்கு அரசு தீர்வு காண வேண்டும். லாபம் கிடைக்கக் கூடிய தொழிலாக விவசாயத்தை மாற்ற வேண்டும். விவசாய நிலங்களை வேறு வகையில் பயன்படுத்த அரசு தடை விதிக்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்து விவசாயிகள் கொண்டு வரும் அனைத்து பொருள்களையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு நெல் போன்ற விளைபொருள்கள் கொள்முதல் செய்வதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் விவசாயிகளுக்கு வட்டியில்லாதக் கடன் வழங்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதில் வசதியானவர்கள்தான் அதிக அளவில் பயனடைந்துள்ளனர். எனவே, கடன் வழங்குவதில் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கடந்த ஆட்சியில் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் கால்வாய்கள், அணைகள் தூர்வாறப்பட்டதில் பெருமளவில் ஊழல் நடந்துள்ளது. இதுபோன்ற திட்டங்களில் ஊழல் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சியில் மறுசீரமைப்பு என்ற பெயரில் வேளாண்மைத் துறை சீரழிக்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளில் தான் வேளாண்மைத் துறை மிக மோசமாக சீரழிந்துள்ளது. அதிலிருந்து விவசாயத் துறையை மீட்டெடுக்க வேண்டும். வேளாண்மை பல்கலைக்கழகத்தில் விதைகள் போன்ற ஆராய்ச்சிகள் எதுவும் நடப்பதில்லை. தனியார் நிறுவனங்கள்தான் புதிதுப்புதிதாக விதைகள் அறிமுகப்படுத்தி வருகின்றன.

பல்வேறு பெயர்களில் போலி மருந்துகள் உலா வந்து கொண்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில் முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சருக்கு வேண்டியவர்கள் என்பதால் இவை அனுமதிக்கப்பட்டன. போலி மருந்துகளை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் பாலகிருஷ்ணன்.

தே.மு.தி.க. உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு): தக்காளி, சின்ன வெங்காயம், காய்கறிகள் போன்ற விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

விவசாயிகளிடமிருந்து 50 பைசாவுக்கு கொள்முதல் செய்யப்படும் தக்காளி, கடைகளில் கிலோ ரூ. 10-க்கு விற்கப்படுகிறது. சின்ன வெங்காயம், முட்டைகோஸ் போன்ற காய்கறிகளுக்கும் இதே

நிலைதான். வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு அப்பாவி விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர்.
விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். வனவிலங்குள் மற்றும் எதிரிகளால் சேதமடைந்த பயிர்களுக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தைப் பரவலாக்க வேண்டும். அதற்கு குறைவான பிரீமியத் தொகையை நிர்ணயம் செய்ய வேண்டும்.
ஈரோட்டில் ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம் அமைக்க வேண்டும். பட்டுக்கூடு உற்பத்தியைப் பெருக்கவும், அதற்கு உரிய விலை கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு ஆலைகள் வைத்துள்ள நிலுவைத் தொகையை உடனே வழங்க அரசு உத்தரவிட வேண்டும்.
தமிழகத்தைச் சேர்ந்த மு.க. அழகிரி மத்திய உரத்துறை அமைச்சராக இருக்கிறார்.
ஆனால், தமிழகத்துக்கு தேவையான உரம் கிடைப்பதில்லை. டி.ஏ.பி. உரத்தின் விலை நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது.
தமிழில் பேசலாம் என மக்களவைத் தலைவர் அழைத்த பிறகும் நாடாளுமன்றத்துக்கு செல்லாத மு.க.அழகிரி இப்போது நாடாளுமன்றக் கூட்டத்திலும், அமைச்சரவைக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார். வழக்குகள் பின் தொடர்வதால் தான் மத்திய அமைச்சர் என்பதைக் காட்டிக் கொள்கிறார் என்றார் வி.சி. சந்திரகுமார்.
இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் சு. குணசேகரன் (சிவகங்கை): முதல் பசுமைப் புரட்சியில் நடந்த தவறுகள் நடக்காதவாறு 2-வது பசுமைப் புரட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும். ரசாயன உரங்களுக்குப் பதிலாக இயற்கை உரங்கள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும்.
மானாவாரி சாகுபடிக்கான உற்பத்தி செலவை அரசே ஏற்க வேண்டும்.
வேளாண்மை காப்பீட்டுத் திட்டங்களில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை களைய வேண்டும்.
தென்னை விவசாயிகள் நலவாரியத்தை கலைக்க வேண்டும் என்றார் குணசேகரன்.

**விற்பனைச் சந்தையில் விவசாயிகளும் பங்குதாரர்களாக சேர்க்கப்படுவர்**

First Published : 17 Aug 2011 01:08:11 AM IST
Last Updated : 17 Aug 2011 06:12:12 AM IST

சென்னை, ஆக. 16: விற்பனைச் சந்தையில் விவசாயிகள் பார்வையாளர்களாக இல்லாமல், 25 சதவீத பங்குதாரர்களாக இருக்கச் செய்வதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுத்துள்ளது என்று வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.
சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

அப்போது நடைபெற்ற விவாதம்:

கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்): விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகளின் முளைப்புத் திறன் 40 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. தரமான விதைகள், உரங்களை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்: முந்தைய ஆட்சிக் காலத்தில் விதைகள், உரங்கள் எப்படி வழங்கப்பட்டது எனத் தெரியாது. ஆனால், இந்த ஆட்சியில் அதுபோன்று எதுவும் நடைபெறாது.

கிருஷ்ணசாமி: தென்னை விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்க முடியவில்லை.

இதனால், தென்னை விவாசயம் செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் தென்னங்கன்றுகள் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன.

கே.ஏ.செங்கோட்டையன்: தென்னை விவசாயத்துக்குத் தேவையான கன்றுகளை உற்பத்தி செய்வதில் சிக்கல் உள்ளது. ஆள் பற்றாக்குறை நிலவுவதால் தென்னங்கன்றுகள் உற்பத்தியில் தேக்கம் உள்ளது.

ஆனாலும், கூடுதல் விலைக்கு தென்னங்கன்றுகள் விற்கப்படுகிறதா என்று கண்காணிக்கப்படும். ஜிப்சம் போன்ற தாது உப்புக்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் இடங்களில் இருந்தே அவை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

கிருஷ்ணசாமி: உரங்கள், விதைகளில் கலப்படம் அதிகளவு உள்ளது. எனவே, அதைத் தடுக்க தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும்.

கே.ஏ.செங்கோட்டையன்: கலப்படத்தைத் தடுக்க தனியாகச் சட்டம் உள்ளது. அது முந்தைய ஆட்சியில் அமல்படுத்தப்பட வில்லை.

கிருஷ்ணசாமி: இரவு பத்து மணிக்கு மேல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. பத்து மணிக்கு மேல் அவர்கள் எப்படி விவசாயம் செய்ய முடியும்?.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக சமூகக் கிணறுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் இப்போது முடங்கியுள்ளது. இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டும்.

கே.ஏ.செங்கோட்டையன்: விற்பனைச் சந்தையில் விவசாயிகள் பார்வையாளர்களாக இல்லாமல், 25 சதவீத பங்குதாரர்களாக இருக்கச் செய்வதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுத்துள்ளது.

**வேளாண் மன்ற சட்டம் வராது: முதல்வர்**

First Published : 17 Aug 2011 02:22:25 AM IST

Last Updated : 17 Aug 2011 06:08:25 AM IST



சென்னை, ஆக. 16: வேளாண் மன்றச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வராது என்று முதல்வர் ஜெயலலிதா உறுதி அளித்தார். சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் சு. குணசேகரன் (சிவகங்கை), கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட வேளாண் மன்றச் சட்டம் கடும் எதிர்ப்பு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. அந்தச் சட்டத்தை தமிழக அரசு வாபஸ் பெற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளித்து முதல்வர் ஜெயலலிதா பேசியது: கடந்த திமுக ஆட்சியில் 2009 ஜூன் மாதத்தில் வேளாண் மன்றச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போது அது சட்டமாக உள்ளது. மாநில அரசிதழில் வெளியிடும் நாளில் இருந்து அது நடைமுறைக்கு வரும். இப்போது அந்தச் சட்டம் செயல்பாட்டில் இல்லை. அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்போவதும் இல்லை. ஆனாலும், அந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமா என்பது குறித்து சட்ட நிபுணர்களிடம் கருத்துக் கேட்கப்படும் என்றார்.

**சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளன**

First Published : 16 Aug 2011 02:50:50 PM IST

கடலூர், ஆக. 15: கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணிகளுக்குத் தேவையான ரசாயன உரங்கள், போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக, வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்து உள்ளார்.

இணை இயக்குநர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் சாகுபடிப் பணிகள் ஆரம்பமாகி உள்ளன. ÷

இம்மாவட்டத்துக்கு ஒவ்வொரு மாதத்துக்கும் தேவையான உரங்களுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உர நிறுவனங்கள் மூலம், விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாதத்துக்குத் தேவையான உரங்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டு உள்ளன. தற்போது கடலூர் மாவட்டத்தில் 3,710 டன் யூரியா, 1,850 டன் டி.ஏ.பி., 3,220 டன் கலப்பு உரங்கள், 276 டன் பொட்டாஷ் உரம் கையிருப்பில் உள்ளன.

இந்த மாதத்துக்கான ஒதுக்கீடான 3,970 டன் யூரியா, 2,600 டன் டி.ஏ.பி. உரம், 1,925 டன் கலப்பு உரங்கள் வர இருக்கின்றன.

பொட்டாஷ் உரம் தேவையான அளவு செப்டம்பர் முதல் வாரத்தில் கிடைக்கும். எனவே விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை, அருகில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிறுவனங்களில் இருந்து பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் உரங்களை வாங்கும்போது, மூட்டைகளில் அச்சிட்ட அதிகபட்ச சில்லரை விலைக்கு மிகாமல், விற்பனை செய்யப்படுகிறதா? என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். ÷

உரங்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டாலோ உரம் கிடைப்பதில் பிரச்னை இருந்தாலோ, தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலோ, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திலோ புகார் தெரிவிக்கலாம்.

கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்யும் உர நிறுவனங்களின் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**அணைகளில் நீர்மட்டம் வேகமாக குறைகிறது**

First Published : 16 Aug 2011 02:27:52 PM IST

அம்பாசமுத்திரம், ஆக. 15: தென்மேற்குப் பருவமழை ஏமாற்றுவதால், பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. இதனால், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 86,000 ஏக்கரில் சாகுபடி செய்துள்ள கார் பருவ நெற்பயிருக்கு இன்னும் 40 நாள்களுக்கு தண்ணீர் வழங்க முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

தாமிரபரணி பாசனத்தில் தென்மேற்குப் பருவமழை ஜூன் முதல் தேதியில் தொடங்கியது. ஆனால், ஒருசில தினங்களே மழை பெய்ததால், பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை.

பருவமழையை நம்பி இந்த கார் பருவத்தில் திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய், கோடகன் கால்வாய், கன்னடியன் கால்வாய், நதியுன்னி கால்வாய், தெற்கு மற்றும் வடக்கு கோடை

மேலழகியான் கால்வாய் மூலம் பாசனம் பெறும் 40,000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 46,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

நிகழ் பருவத்தில் இவ்விரு மாவட்டங்களிலும் முழு அளவில் பாசனம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அணைகளில் நீர் இருப்பு வெகுவாக குறைந்து வருவதால், கார் பருவ சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் வழங்க முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 44.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 60.27 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 51.59 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 59.70 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 55.25 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 571 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 3 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையில் இருந்து குடிநீர், பாசனத் தேவைக்கு 800 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் பாசனத்துக்கு 25 கனஅடி மட்டும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததால் பாசனத்துக்கு கால்வாய்களில் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. ஏற்கெனவே பாளையங்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் பயிர் கருகும் நிலையில் இருப்பதாக புகார் எழுந்துள்ளது.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் பாசனத்துக்கு கால்வாய்களில் குறைந்த அளவே தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணைகளின் நீர்இருப்பு வெகுவாக குறைந்து வருவதால் கார் பருவ சாகுபடிக்கு இன்னும் 40 தினங்களுக்கு தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

**சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளன**

First Published : 16 Aug 2011 02:50:50 PM IST

கடலூர், ஆக. 15: கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணிகளுக்குத் தேவையான ரசாயன உரங்கள், போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக, வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்து உள்ளார்.

இணை இயக்குநர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் சாகுபடிப் பணிகள் ஆரம்பமாகி உள்ளன. ÷

இம்மாவட்டத்துக்கு ஒவ்வொரு மாதத்துக்கும் தேவையான உரங்களுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உர நிறுவனங்கள் மூலம், விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாதத்துக்குத் தேவையான உரங்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டு உள்ளன. தற்போது கடலூர் மாவட்டத்தில் 3,710 டன் யூரியா, 1,850 டன் டி.ஏ.பி., 3,220 டன் கலப்பு உரங்கள், 276 டன் பொட்டாஷ் உரம் கையிருப்பில் உள்ளன.

இந்த மாதத்துக்கான ஒதுக்கீடான 3,970 டன் யூரியா, 2,600 டன் டி.ஏ.பி. உரம், 1,925 டன் கலப்பு உரங்கள் வர இருக்கின்றன.

பொட்டாஷ் உரம் தேவையான அளவு செப்டம்பர் முதல் வாரத்தில் கிடைக்கும். எனவே விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை, அருகில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிறுவனங்களில் இருந்து பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் உரங்களை வாங்கும்போது, மூட்டைகளில் அச்சிட்ட அதிகபட்ச சில்லரை விலைக்கு மிகாமல், விற்பனை செய்யப்படுகிறதா? என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். ÷

உரங்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டாலோ உரம் கிடைப்பதில் பிரச்னை இருந்தாலோ, தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலோ, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திலோ புகார் தெரிவிக்கலாம்.

கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்யும் உர நிறுவனங்களின் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**பவானிசாகர் அணையில் தண்ணீர் திறப்பு**

First Published : 16 Aug 2011 10:01:50 AM IST

சத்தியமங்கலம், ஆக. 15: பவானிசாகர் அணையில் இருந்து நன்செய் சாகுபடி பாசனத்திற்காக திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

சத்தியமங்கலம் அருகேயுள்ள பவானிசாகர் அணையின் நீர்மட்ட கொள்ளளவு 120 அடி ஆகும். இந்த அணையின் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் கீழ்பவானி பாசன நிலங்கள் பயன்பெறுகின்றன.

இந்தாண்டு பாசனத்திற்காக ஆக.15ம் தேதி முதல் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடும்படி, ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி,பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு விழா திங்கள்கிழமை நடந்தது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் தண்ணீரை திறந்து வைத்தார். கால்வாய்க்கு பாய்ந்து வந்த தண்ணீரில் மலர்களை தூவி அனைவரும் வரவேற்றனர். இதில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பி.எல்.சுந்தரம் (பவானிசாகர்), தோப்பு என்.டி.வெங்கடாசலம்(பெருந்துறை), ஆர்.என்.கிட்டுசாமி (மொடக்குறிச்சி), பி.ஜி.நாராயணன்(பவானி), கரூர் மாவட்டம் கிருஷ்ணாராயப்புரம் எஸ்.காமராஜ் மற்றும் காங்கேயம் என்எஸ்என் நடராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதல்கட்டமாக விநாடிக்கு 500 கன அடி நீர் திறந்துவிடப்பட்டு, பின்னர் படிப்படியாக செவ்வாய்க்கிழமை மாலை 2,300 கன அடி நீராக வெளியேற்றப்படும். திங்கள்கிழமை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 84.15 அடி. அணைக்கு விநாடிக்கு 1060 கன அடி நீர் வந்துக் கொண்டிருந்தது.

ஆட்சியர் கூறியது:

இந்த அணையில் இருந்து நன்செய் பாசனத்துக்காக (ஆக.15) திங்கள்கிழமை முதல் டிச.15ம் வரை தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி, ஈரோடு, பெருந்துறை, காங்கயம், அரவக்குறிச்சி வட்டம் ஆகிய 7 வட்டங்களில் உள்ள 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் விளை நிலங்கள் பயன்பெறும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி பாசனம் செய்து அதிகம் பயன்பெற வேண்டும் என்றார்.

ஏற்பாடுகளை பொதுப் பணித் துறை தலைமை பொறியாளர் சிவசங்கரன், அணைக்கட்டு செயற்பொறியாளர் வெங்கடாசலம், உதவி செயற்பொறியாளர் ராம்பிரசாத் செய்திருந்தனர்.

---

தினமலர்

**வருடம் முழுவதும் வெண்டை சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,00:00 IST



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியில் கிணற்றுப் பாசன நிலங்களில் நெல் சாகுபடி செய்ய இயலாத இடங்களில் குறுகிய காலப்பயிரான வெண்டையை சாகுபடி செய்யலாம். இம்மாதிரியான சூழ்நிலையில் வெண்டை சாகுபடி செய்த விவசாயிகள் நல்ல லாபம் எடுத்துள்ளனர். ஆனி-ஆடி பட்டத்தில் ஒருவிதமான காற்றும் உஷ்ணமும் நிலவும். இச்சூழ்நிலையில் மஞ்சள் நரம்பு நோய் செடிகளைத் தாக்கும். விவசாயிகளுக்கு பேயர் கம்பெனிக்காரர்கள் உதவி செய்வார்கள். இவர்களிடம் "கௌச்' என்னும் மருந்து உள்ளது. இந்த மருந்தினை விதையுடன் கலந்து விதைத்தால் வியாதி வருவதில்லை. பேயர் கம்பெனி விதையுடன் மருந்து கலந்து கொடுத்து உதவுகின்றது. இந்த கம்பெனியில் அதிக மகசூல் தரும் ஒட்டு வீரிய ரகங்களும் உள்ளன. (மைக்கோவின் ஒட்டு வீரிய ரகங்களான நம்பர் 10, 11, 12) விதையுடன் மருந்து கலப்பது எப்படியெனில், ஒரு கிலோ விதைக்கு 30 கிராம் கௌச் மருந்து கலக்க, ஆறிய அரிசி கஞ்சியை எடுத்துக்கொண்டு அதில் விதைமருந்து இட்டு நன்கு கலந்து பின் விதையினை நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளலாம். சாகுபடிக்கு தேர்ந்தெடுத்த நிலத்தினை நன்கு உழுது ஏக்கருக்கு நன்கு மக் கிய தொழுஉரம் 10 டன் இட்டு மீண்டும் இயற்கை உரம் மண் ணோடு நன்கு கலக்கும்படி உழவேண்டும். நிலத்தில் 60 செ.மீ. இடைவெளி கொடுத்து பார்சால் அமைக்க வேண்டும். நாம் தேர்ந்தெடுத்த ரகங்களின் விதையை பாரில் விதைக்கு விதை 20 செ.மீ. இடைவெளியில் குழிக்கு ஒன்று அல்லது இரண்டு விதைகளை விதைத்தபின் எம்.என். மிக்சர் 5 கிலோவை மணலுடன் கலந்து நிலத்திற்கு ஒரே சீராக இடவேண்டும். உடனே பாசனம் செய்ய வேண்டும். செடி முளைத்து மூன்று இலை பருவத்தை அடைந்தவுடன் ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் அன்னபேதி உப்பு மற்றும் 20 கிராம் யூரியா இவைகளை கலந்து செடிகள் மேல் தெளிக்க வேண்டும். வளர்ச்சி காலத்தில் மூன்று முறை களையெடுக்க வேண்டும். இரண்டாவது களையெடுக்கும் சமயம் ஏக்கருக்கு ஒரு மூடை டிஏபி, 1 மூடை பொட்டாஷ் இட்டு செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

செடியின் வயது 25 நாட்கள் இருக்கும்போது "கான்பிடார்' என்ற மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி என்ற அளவு தெளித்துவிட வேண்டும். இதுநல்ல காரமுள்ள மருந்தாகும். இது விதை விதைத்து 70 நாட்கள் வரை செடியை மஞ்சள் நோய் வராமல் தடுக்கும். செடி நட்ட 25ம் நாளிலிருந்து காய்க்கத் துவங்கும். சாம்பல் நோய் தென்பட்டால் ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் நனையும் கந்தகம் கலந்து செடிகள் மேல் தெளிக்க வேண்டும்.

**உஷ்ணம் தணிக்க**: ஆனி-ஆடி பட்டத்தில் காற்று மற்றும் ஒருவிதமான ஒடுக்கம் இருக்கும். இதை தவிர்க்க வெண்டைச் செடிகளைச் சுற்றி கொத்தவரை செடிகளை வளர்க்க வேண்டும். பூசா நவுபகார் என்னும் ரகம் அடர்த்தியாக உயரமாகவும் வளரும். கீழே சாயாமல் இருக்க குச்சிகள் நட்டு அதனுடன் செடிகளை கட்டிவிட வேண்டும். கொத்தவரை செடிகள் வெண்டை செடிகள் உஷ்ணத்தினால் பாதிக்கப் படாமல் பாதுகாக்கும். மேலும் கொத்தவரை கொடுக்கும் மகசூலும் விவசாயிகளுக்கு வரமாக அமையும். ஏக்கரில் ரூ.1000 வரை வரவு கிட்டும்.

**வெண்டை அறுவடை**: நிலத்தில் விதை விதைத்த 35ம் நாள் முதல் இரண்டு அல்லது மூன்று நாட்கள் இடைவெளியில் அறுவடை கிடைக்கும். மொத்தமாக 20, 25 அறுவடைகள் கிடைக்கும். விவசாயிகள் கவனித்து இளசான காய்களை பறிக்க வேண்டும். கவனிப்பு சரியில்லையேல் காய்கள் முதிர்ச்சி அடைந்துவிடும்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**மிளகாய் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,00:00 IST



நல்ல வடிகால் வசதியுடைய நிலங்கள் மிளகாய் பயிரிட ஏற்றவை. கடல்மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரம் வரை உள்ள வெப்பப் பிரதேசங்களில் மிளகாய் நன்கு வளரும். ஜனவரி -பிப்ரவரி, ஜூன்-ஜூலை, செப்டம்பர் ஏற்ற பருவங்கள். ஒரு ஏக்கருக்கு 400 கிராம் (20,000 நாற்றுகள்) விதை தேவைப்படும்.

மானாவாரி மற்றும் இறவையில் பயிரிட ஏற்றது. கோ.1, கோ.2, கோ3, பிகேஎம்1, மேலும் சாத்தூர் சம்பா, ராமநாதபுரம் குண்டு, நம்பியூர் குண்டு ஆகிய நாட்டு வகைகளும் அந்தந்த பகுதிகளில் பயிர் செய்யப்படுகின்றன.

ஒரு கிலோ விதைக்கு காப்டான் அல்லது திராம் 2 அல்லது டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் வீதம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும். அசோஸ் பைரில்லம் நுண்ணுயிரியை எக்டருக்கு 2 பொட்டலம் வீதம் விதைநேர்த்தி செய்வதால் தழைச்சத்தின் தேவையினை 25 விழுக்காடு அளவுக்கு குறைக்கலாம்.

நாற்றங்கால்: நாற்றங்காலுக்கு மேட்டுப்பாத்திகள் 1 மீட்டர் அகலம், 3 மீ. நீளம், 15 செ.மீ. உயரம் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு செண்ட் நாற்றங்காலுக்கு மக்கிய தொழு உரம் 75 கிலோ இடவேண்டும். பாத்திகளில் விதைகளை 2 செ.மீ. ஆழத்தில் 5-10 செ.மீ. இடைவெளியில்

வரிசையில் விதைத்தபிறகு வைக்கோல் அல்லது உலர்ந்த இலைகளைப் பாத்திகளின் மேல் பரப்பி, பூவாளியால் தண்ணீர் ஊற்றவும். விதைத்த 10-15 நாட்களில் பாத்திகளில் பரப்பியதை அகற்றிவிட வேண்டும். நாற்றங்காலில் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த 15 நாட்கள் இடைவெளியில் புளூகாப்பர் 2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் நீரில் கலந்து ஊற்ற வேண்டும். நடவுக்காக நாற்று பிடுங்குவதற்கு 15 நாட்களுக்கு முன் ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 250 கிராம் பியூரடான் குருணைகளை இடுவது நூற்புழு மற்றும் இளம் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும். நடு வதற்கு 40 முதல் 44 நாட்கள் வயது டைய நாற்றுகளே ஏற்றவை. நேரடியாக விதைக்கப்பட்ட பாத்திகளில் விதைத்த 30 நாட்களுக்குப் பிறகு தேவையான பயிர் எண்ணிக்கை இருக்குமாறு கலைத்து இடைநிறைவு செய்வது அவசியம்.

நிலத்தை 4 முறை உழுது, கடைசி உழவின்போது எக்டருக்கு 25 டன் தொழு எரு அல்லது மக்குகுப்பை இட்டு 45 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து, பயிருக்கு பயிர் 30 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும். கோ 3 வகைகளுக்கு 30 து 15 செ.மீ. இடைவெளி யில் நடவு செய்ய வேண்டும்.

அடியுரமாக எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். மானாவாரி அல்லது இறவைப்பயிர் இரண்டிற்கும் தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவேண்டும். விதைத்த 70, 100 மற்றும் 130வது நாள் நடவுப்பயிரில் நட்ட 30, 60, 90ம் நாள் ஒவ்வொரு முறையும் எக்டருக்கு 30 கிலோ வீதம் இடவேண்டும். உரம் இட்டபின் நீர் பாய்ச்ச வேண்டும்.

பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் விடுவதைத் தூண்டவும் நட்ட 60 அல்லது விதைத்த 100வது நாளில் ஒரு முறையும், 30 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையும் வளர்ச்சி ஊக்கி (என்ஏஏ) 10 மில்லிகிராம் ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். மேலும் டிரையகான்கைடனால் 1.25 மிலி/ லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பச்சை மிளகாயை நட்ட 75 நாட்கள் அல்லது விதைத்த 105 நாட்களிலும், பழுத்த பழங்களை ஒரு மாதத்திற்குப் பின்னும் அறுவடை செய்யலாம். மேலும் 3 முதல் 4 மாதங்களுக்கு தொடர்ந்து அறுவடை செய்யலாம். முதல் இரண்டு பறிப்புகளிலிருந்து பச்சை மிளகாயும் அடுத்த பறிப்புகளிலிருந்து பழுத்த மிளகாயும் அறுவடை செய்யலாம்.

**மகசூல்**: ஒரு எக்டருக்கு-210-240 நாட்களில், வற்றல்- 2-3 டன், பச்சைமிளகாய்-10-15 டன்.

**தொடர்புக்கு**: அகமது கபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர், தாராபுரம்-638 657.- அகமது கபீர், தாராபுரம்,மொபைல்: 93607 48542.

**முள் இல்லா மூங்கில் நாற்றுக்கள் தயாரிக்கும் முறை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**

கழிகளைப் பயன்படுத்தி நாற்றுக்களை உற்பத்தி செய்தல்: நன்கு வளர்ந்த தரமுள்ள மூங்கில் தூர்களிலிருந்து கழிகளை வெட்டியபிறகு பக்கக்கிளைகளை கழியிலிருந்து ஒரு அங்குலம் விட்டு வெட்டி எடுக்க வேண்டும். இவ்வாறு தயார் செய்ய முழு கழிகளை நீண்ட தாழ்வான பாத்திகளில் மணல், மண் 2:1 என்ற அளவில் இட்டு கழிகளைப் பதித்து கழிகள் மூடும் அளவிற்கு மண்கலவை கொண்டு மூடவேண்டும். காலை, மாலை நேரங்களில் நீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு நட்ட கழிகளின் உயிர் மொட்டுக்களில்இருந்து முதலில் புதிய தண்டுகள் 10-20 நாட்களில் தோன்றும். பிறகு வேர் தோன்ற ஆரம்பித்த 2 மாதங்களில் கன்றுகளைப் பிடுங்கி நடுவதற்கு ஏற்ற நிலையை அடையும். இவ்வாறு வேருடன் உள்ள தண்டுகளைக் கொண்ட கணுக்களை தனித்தனியாக வெட்டி பிரிக்க வேண்டும். பிறகு தண்டுகளை பவிஸ்டின் 2 சதம் கரைசலில் முக்கி பிறகு 25 செ.மீ. X 15 செ.மீ. பாலிதீன் பைகளில் மண்கலவை மண், மணல், மக்கிய தொழு உரம் (2:1:1) நிரப்பி நட்டு 50 சதம் பசுமைக்கூண்டில் ஒரு மாதம் வைக்க வேண்டும். பிறகு வெட்டவெளியில் 1 மாதம் வைத்திருந்து 5-6 மாதம் வயதுடைய நாற்றுக்களை வயலில் நடலாம்.
இதுதவிர கழிகளில் உள்ள உயிர் கணுக்களைத் தனித்தனியாக வெட்டியெடுத்து ஐ.பி.ஏ.200 பி.பி.எம். கரைசலில் இரவு முழுவதும் ஊறவிட்டு பிறகு 2 சதம் பவிஸ்டின் கரைசலில் நனைத்து நேரடியாக 25 செ.மீ. X 15 செ.மீ. பாலிதீன் பைகளில் மண்கலவையை நிரப்பி நட்டு, நீர் பாய்ச்சி 4 முதல் 5 மாதங்களில் தரமான கன்றுகளை உருவாக்கலாம்.
இது தவிர மூங்கில் கழிகளை 2 அல்லது 3 கணுக்களைக் கொண்ட பாகங்களாக வெட்டி ஒவ்வொரு கணுக்களின் இடையில் ஒரு சிறிய துவாரமிட்டு ஐ.பி.ஏ. 100-200 பி.பி.எம். கரைசலை ஊசி மூலம் உட்செலுத்த வேண்டும். துவாரமிட்ட பகுதியை அடைத்து, பின் மேற்கூறப்பட்ட முறையில் பாத்திகளில் நட்டு நாற்றுகளை உற்பத்தி செய்யலாம்.
**பக்கக் கிளைகளைக் கொண்டு நாற்றுகளை உற்பத்தி செய்தல்**: ஒன்றரை - இரண்டு ஆண்டுகள் வயதுடைய கழிகளில் பக்கக்கிளைகள் கழிகளுடன் இணையும் பகுதிகளில் கணுக்களில் வேர் முடிச்சுக்கள் காணப்படும். இந்த வேர் கொண்ட பக்கக்கிளைகளை கழிகளிலிருந்து அடிபடாமல் அகற்றி 1 அ 2 கணுக்கள்விட்டு வெட்டி 400-2000 பிபிஎம் ஐ.பி.எம். கரைசலில் முக்கி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு 2 சதம் பெவிஸ்டினில் நனைத்து பாலிதீன் பைகளில் நட்டு பசுமைக் கூடாரத்தில் வைத்து நீர் ஊற்றி கன்றுகளை வளர்க்கலாம்.
**கன்றுகளின் தண்டுகளைப் பிரித்து நடும் முறை**: விதை, விதையில்லா முறையின் மூலம் உற்பத்தி

செய்த தரமான கன்றுகளைக் கொண்டு குறுகிய காலத்தில் அதிகளவு கன்றுகளை உற்பத்தி செய்ய இயலும். தேர்வு செய்த கன்றுகள் ஊட்டச்சத்து மிக்க பாத்திகளில் மண், மணல், மக்கிய தொழு உரம் 2:1:1 விகிதத்தில் கலந்து டி.ஏ.பி. 50 கிராம்/ச.மீ., பொட்டாஷ் 25 கிராம், பாஸ்போ பாக்டீரியா 25 கிராம் மற்றும் வாம் 50 கிராம் இட்டு நன்றாக கலக்க வேண்டும். 1 X 1 அடி இடைவெளியில் கன்றுகளை நடவேண்டும். காலை மாலை நேரங்களில் நீர் ஊற்ற வேண்டும். 4 முதல் 5 மாதங்களில் பக்கக்கிளைகள் தோன்றும். அப்பொழுது இக்கன்றுகளைத் தோண்டி எடுத்து தண்டுகளை வேருடன் பிரித்து ஒரு தண்டை மட்டும் மீண்டும் தயார் செய்த பாத்திகளில் நட்டு மீத முள்ள தண்டுகளை தயார்செய்த பாலிதீன் பைகளில் 2 சதம் பெவிஸ்டின் கரைசலில் ஊறவைத்து வேருடன் நட்டு, பசுமைக்குடிலில் வைத்து நீர் பாய்ச்சி புதிய கன்றுகளை 2 மாதங்களில் உருவாக்கலாம். பாத்திகளில் நட்ட கன்றுகளை மீண்டும் 4 முதல் 5 மாதங்களில் எடுத்து பிரித்து நாற்றுகளை உற்பத்தி செய்யலாம். இவ்வாறாக 4 முதல் 5 முறை செய்தபின் புதிய நாற்றுகளைப் பயன்படுத்த வேண்டும்.

**நாற்றுக்களின் வயது**: மூங்கில் நாற்றுக்கள் நடவு வயலில் நடுவதற்கு குறைந்தது 6 மாதங்களாவது நாற்றங்காலில் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். 10 முதல் 12 மாதங்கள் வளர்க்கப்பட்ட வாளிப்பான கன்றுகளை நடுவது மிக நல்லது. (தகவல்: சுரேஷ், ஐ.சேகர், கி.பரணீதரன், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்-641 301. போன்: 04254-222 010).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த உதவி இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,02:56 IST

ராசிபுரம்: "மரவள்ளியில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த, ஒட்டுண்ணி பயன்படுத்த வேண்டும்' என, மல்லசமுத்திரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் துரைசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: மல்லசமுத்திரம் வட்டாரத்தில், 540 ஹெக்டேர் பரப்பில் மரவள்ளி பயிர் சாகுபடி செய்யப்பட்டு வளர்ந்த நிலையில் உள்ளது. தற்போது, மரவள்ளி பயரில் ஒரு சில பகுதிகளில் மாவுப்பூச்சி தென்படுகிறது. இதை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தலாம். அசிரோப்கஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணியை, மாவுப்பூச்சி தாக்கப்பட்ட வயலில் விடும் போது, அந்த ஒட்டுண்ணி மாவுப்பூச்சியின் மேல் முட்டையிட்டு அதை அழிக்கிறது. ஓட்டுண்ணி விடும் வயலில் பூச்சி மருந்து தெளித்தல் கூடாது. நாமக்கல் அருகே உள்ள லத்துவாடியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஒட்டுண்ணி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒட்டுண்ணி தேவைப்படும் விவசாயிகள் லத்துவாடி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பெயரை பதிவு செய்து, ஒட்டுண்ணிகளை பெற்று, மாவுப்பூச்சி

தாக்கப்பட்ட வயலில் விட்டு ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நர்சரி பண்ணைக்கு விற்பனைக்கு செல்லும் நாற்று தொட்டி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,01:58 IST

தர்மபுரி : தர்மபுரி அடுத்த கிருஷ்ணாபுரத்தில் தயார் செய்யப்படும் நாற்று தொட்டிகள் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள தனியார் நர்சரி பண்ணைக்கு விற்பனைக்கு செல்கிறது. ஆர்டர் இருந்தும் தொட்டிகள் செய்து கொடுக்க முதலீடு இல்லாமல் மண் பாண்ட தொழிலாளர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். வங்கி கடன் உதவிகள் வழங்கிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, கிருஷ்ணாபுரம், மணியம்பாடி, அதியமான்கோட்டை, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய பகுதியில் 150க்கும் மேற்பட்ட மண்பாண்ட தொழிலாளர்கள் குடும்பத்தினருடன் வசித்து வருகின்றனர். மண்பாண்ட தொழிலாளர்கள் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு மண் பாண்ட பொருட்கள் தயார் செய்து சந்தைப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். தர்மபுரி, மணியம்பாடி பகுதியில் பானைகள், அடுப்புகள், உண்டியல், சிறு பொம்மைகள் தயார் செய்கின்றனர். அதியமான்கோட்டை பகுதியில் களி மண் பொம்மைகள், கொலு பொம்மைகள், விநாயகர் சிலைகள் உள்ளிட்டவைகள் தயார் செய்கின்றனர். பாலக்கோடு, தர்மபுரியை அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் அதிக அளவில் நர்சரி பண்ணைகளுக்கு தேவைப்படும் நாற்று தொட்டிகள் அதிக எண்ணிக்கையில் தயார் செய்து தமிழகம் முழுவதும் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.

கிருஷ்ணாபுரம் பகுதியில் மட்டும் 20க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஆண்டு முழுவதும் நாற்று தொட்டிகள் செய்து விற்பனை செய்கின்றனர். பொங்கல் பண்டிகை காலங்களில் மண் பானைகள், அடுப்புகள் தயார் செய்து விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இருப்பினும் நாற்று தொட்டிகள் தான் ஆர்டரின் பேரில் அதிக எண்ணிக்கையில் தயார் செய்து விற்பனைக்கு செல்கிறது. இங்கு தயார் செய்யப்படும் தொட்டிகள் தர்மபுரி, சேலம், தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட பகுதியில் உள்ள தனியார் நர்சரி பண்ணைகளுக்கு வியாபாரிகள் ஆர்டரின் பேரில் கொள்முதல் செய்து விற்பனைக்கு எடுத்து செல்கின்றனர்.

ஒரு தொட்டி 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு டிராக்டர் மண் லோடு 1,000 ரூபாய்க்கு வாங்கி தயார் செய்யப்படும் இந்த தொட்டிகளை ஒரு நபர் 200 முதல் 300

தொட்டிகள் வரையில் ஒரு நாளைக்கு தயார் செய்கின்றனர். தயார் செய்யப்பட்ட தொட்டிகள் வெயிலில் உலர்த்திய பின் சூளையில் வேக வைத்து விற்பனைக்கு செல்கிறது.
மழைக்காலங்களில் இத்தொழில் பாதிக்கப்படும். அதே நேரம் நர்சரிகளில் மழைக்காலங்களில் நாற்றுக்கள் உற்பத்தி பணி சுறுசுறுப்பாக நடக்கும். இந்த நேரங்களில் தொட்டிகள் தயார் செய்ய முடியாத நிலையிருப்பதாலும், கூடுதல் முதலீடு செய்து தொட்டிகளை இருப்பு வைக்கும் அளவுக்கு முதலீடுகள் இல்லாததால், கிருஷ்ணாபுரம் பகுதியை சேர்ந்த மண்பாண்ட தொழிலாளர்கள் வெயில் காலத்தில் மட்டும் தொட்டிகளை விற்பனை செய்யும் நிலையும், பண முதலீடு இருந்தால், மழை காலத்துக்கு தேவையான தொட்டிகளை தயார் செய்து இருப்பு வைத்து விற்பனை செய்ய வாய்ப்புகள் உள்ளது.

இது குறித்து மண்பாண்ட தொழிலாளி சக்திவேல் "நமது' நிருபரிடம் கூறியதாவது: நாற்று தொட்டிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. பெரும்பாலும் இத்தொழிலில் பெரிய அளவில் முதலீடு செயய முடியாததால், எங்கள் பகுதியில் உள்ளவர்கள் குறிப்பிட்ட தொகைக்கு தயார் செய்து விற்பனை செய்கிறோம். கூடுதல் முதலீடு செய்தால், தொட்டிகள் அதிக அளவில் இருப்பு வைத்தும் நாங்களே நேரடியாக நர்சரி பண்ணைகளுக்கு விற்பனை செய்ய வாய்ப்பு கிடைக்கும். வங்கிகளில் கடந்த காலங்களில் சிறு தொழில் பிரிவில் கடன் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஐந்தாண்டுக்கு மேலாக வங்கிகளில் கடன் வழங்க மறுத்து வருகின்றனர். எங்களுக்கு வங்கிகள் கடன் உதவிகள் வழங்கினால், நசிந்து வரும் மண் பாண்ட தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மழையால் நெற்பயிர், வாழை மரங்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,02:49 IST

ஈரோடு: வெயிலால் ஈரோடு மக்கள் வாடி வதங்கி வந்த நிலையில், நேற்று திடீரென மேகம் திரண்டு மழை பெய்ததால் ஈரோடு குளிர்ந்தது. கோபி பகுதியில் நெற்கதிர்கள், வாழை மரங்கள் சாய்ந்தன.
தென்மேற்கு பருவமழை சீஸன் துவங்கினாலும், மழை மறைவு பிரதேசமாக சீஸனில் குறைவான மழையே ஈரோடு மாவட்டம் பெறுகிறது. இருந்தாலும் கடுமையாக கொளுத்தும் வெயிலால் ஈரோடு மக்கள் தவித்து வருகின்றனர். வெளியில் செல்லவே முடியாத நிலையில் வெயில் வாட்டி வருகிறது.
நேற்று முன்தினம் கடுமையான வெயிலால் வதங்கிய மக்களுக்கு, இரவில் சிறிது நேரம் மழை பெய்து ஆறுதல் அளித்தது. நேற்று காலையில் இருந்தே மேகம் திரண்டு இருந்தது. சிறிய மழைத்துளிகள் விழுந்தன. பிறகு வெயில் வாட்டத்துவங்கியது. மதிய நேரத்தில் மீண்டும் மேகம்

திரண்டு, வானம் கறுத்தது.
மாலை 3 மணிக்கு திடீரென மழை பெய்யத்துவங்கியது. அரை மணி நேரம் பெய்த மழையால் ஈரோடு குளிர்ந்தது. வடிகால் வசதியில்லாத பகுதிகளில் மழை நீர் ஆங்காங்கே தேங்கியது. திடீரென பெய்த மழையால் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.
கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் இரு நாட்களாக பெய்யும் மழையால் நெல் வயலில் நெற்கதிர்கள் சாய்ந்தன. நேற்று முன்தினம் சூறாவளியுடன் கூடிய மழையால் 3,000க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சாய்ந்தன.
கோபி சுற்று வட்டாரத்தில் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனத்தில் பங்களாபுதூர், கோபி, கூகலூர் உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. அறுவடைக்கு தயாராகும் நிலையில், கோபி வட்டாரத்தில் இரு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழை காரணமாக நெல் வயல்களில் நெற்கதிர்கள் கீழே சாய்ந்து விட்டன. நெல் மணிகள் கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
கோபி சுற்று வட்டாரத்தில் புஞ்சைபுளியம்பட்டி, பங்களாபுதூர், கூகலூர் உள்ளிட்ட இடங்களில் நெல் வயல்களில் நெல் கதிர் கீழே சாய்ந்து விட்டன. கீழே சாய்ந்து கிடக்கும் நெல் கதிர்களை சரி செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் நம்பியூர், குருமந்தூர், ஆயிபாளையம், காரப்பாடி ஆகிய இடங்களில் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. பலத்த காற்று அடித்தன் காரணமாக இப்பகுதியில் உள்ள வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விட்டன. ராமசாமி என்பவரது இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டு இருந்த 1,000 கதளி வாழை மரங்கள், 500 பூவன் வாழை மரங்கள், பழனிசாமி என்பவரது தோட்டத்தில் 700 கதளி வாழை மரங்களும், சண்முகம் என்பவரது தோட்டத்தில் 600க்கும் மேற்பட்ட கதளி உள்பட 3,000க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் கீழே சாய்ந்து விட்டன.
விவசாயிகள் கூறியதாவது:
மழை அதிகளவில் பெய்தாலும் சரி, காற்று அடித்தாலும் அதிகளவில் பாதிக்கப்படுவது விவசாயிகளே. கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற இரு நாட்களாக சிறிய அளவில் மழை பெய்துள்ளது. சிறிய மழையால் நெல் வயல்களில் நெல் கதிர்கள் சாய்ந்து விட்டன. நம்பியூர் வட்டாரத்தில் சூறாவளி காற்று அடித்தன் காரணமாக வாழை மரங்கள் சாய்ந்து விட்டது. விவசாயிகளுக்கு, அரசு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கூண் வண்டு கட்டுப்படுத்த புதிய மருந்து**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,02:49 IST

சென்னிமலை:தென்னையைத் தாக்கும் சிவப்பு நிற கூண்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த, புதிய மருந்து அறிமுகமாகியுள்ளது.
தென்னை மரங்களை தாக்கி அழிக்கும் நோய்களுக்கு பஞ்சமில்லாமல் போய்விட்டது. "ஈரியோபைட்' என்ற சிலந்தி, மிக அதிகமாக தென்னையை தாக்கியது. தற்போது, குறைந்த வயதுடைய தென்னை மரங்களில், சிவப்பு நிற கூண்வண்டு தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. மரத்தின் குறுத்து மற்றும் தண்டுப்பகுதியில் இவை துவாரங்களை ஏற்படுத்தி முட்டையிடுகிறது. இவை தாக்கப்பட்ட மரம், உடனே காய்ந்து விடுகிறது.
இக்கொடிய தென்னையை தாக்கும் வண்டுகளையும், புழுக்களையும் கொல்ல, இதுவரை விவசாயிகள் கொடி நஞ்சு மாத்திரையான "சல்பாஸ்' மாத்திரைகளை, மரத்தில் துளையிட்டு வைத்து வந்தனர். அப்படி வைத்தால் மரத்தில் இருந்து ஒரு மாதத்திற்கு இளநீர், தேங்காய் எதுவும் பறிக்க கூடாது. அப்படி பறித்து உண்டால் மரணம் ஏற்படும் அபாய நிலை இருந்தது. இதனால், இந்த மாத்திரை வைக்க பயந்தே சில விவசாயிகள் தென்னையை அழிய விட்ட நிகழ்வும் நடந்ததுண்டு.
தஞ்சை, "டாரி பயோ டெக்' கம்பெனி ஆராய்ச்சி மேம்பாட்டு ஆய்வாளர்கள் அருண்குமார், தார்சியாஸ் ஆகியோர், புதிய தொழில்நுட்பத்தில் மருந்து வைக்கும் முறையை, சென்னிமலை விவசாயிகளுக்கு செய்து காண்பித்தனர். முகாசிபிடாரியூர் நேரு என்பவரது தோட்டத்தில் 45 மரங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.
"சூடோகான், பெவேரிசைட், மெட்டாசைட் ஆகிய மருந்துகளை குறிப்பிட்ட விகிதங்களில் மாட்டு சாணத்தில் கலந்து, வண்டு தாக்கிய துவாரத்தில் பூசி விட்டால், வண்டு தாக்குதலில் இருந்து மரத்தை முழுவதுமாக காப்பாற்றி விடலாம். இந்த மருந்துகளில் அதிகளவில் நஞ்சு தன்மை இல்லை.
தேவைப்பட்டால் மண்வழியாக சூடோகான், டெர்மகான், பெவேரிசைட், மெட்டாசைட், ஆர்கானிப்பிளஸ் போன்ற மருந்துகளை, மரத்தின் அடியில் வட்ட பாத்தியில் ஊற்ற வேண்டும்' என, அவர்கள் விளக்கமளித்தனர்.

## பவானிசாகர் அணையின் மாதிரி வடிவம் சீராகுமா?

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,02:49 IST

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணை பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள, அணையின் மாதிரி வடிவம் பராமரிப்பின்றி குப்பையாக கிடக்கிறது.

"நதி மூலம், ரிஷி மூலம் காண முடியாது' என்பர். ஆனால், பவானிசாகர் அணை பூங்காவுக்கு சென்றால், பவானி நதியின் பிறப்பிடத்தை காணலாம்.

பவானிசாகர் அணை 1952ல் கட்டி முடித்த போது, அணையுடன் நீர் மின் நிலையமும், அதன் அருகில் அழகிய பூங்காவும் கட்டப்பட்டன. பூங்காவுக்குள் பல்வேறு அழகிய பூஞ்செடிகள், மரங்கள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் செயற்கை நீரூற்று, செயற்கை அருவி, படகு சவாரி செய்ய வசதி, குழந்தைகளுக்கான பல்வேறு விளையாட்டு சாதனங்கள் இடம்பெற்றிருந்தன.

பூங்காவில் உள்ள தேசிய சின்னம் அருகில், 15க்கு பத்து அடி பரப்பளவுள்ள அறையில், பவானியாறு உற்பத்தியாகும் மலைப்பகுதிகளை அப்படியே பிரதிபலிக்கும் மாதிரி வடிவம் கட்டப்பட்டுள்ளது.

நீலகிரி மலைப்பகுதியில் உள்ள தொட்டபெட்டா உள்ளிட்ட மலை சிகரங்கள், பவானியாறு உற்பத்தியாகும் இடம், பல காட்டாறுகள் இணைந்து பவானியாறுடன் இணைந்து; அது ஓடிவரும் பாதை, வழியிலுள்ள குந்தா, பில்லூர் உள்ளிட்ட அணைக்கட்டுகள் ஆகியவை இதில் இடம்பெற்றிருந்தன. இதன் மற்றொருபுறம், தலமலை காப்புகாடுகளில் இருந்து மோயாறு தோன்றும் விதம் வடிவமைக்கப்பட்டிருந்தது. மோயாறும், பவானியாறும் சங்கமிக்கும் இடத்தில், பவானிசாகர் அணை அமைந்துள்ள விதத்தை அப்படியே பிரதிபலிக்கும் விதமாக, இந்த அமைப்பு இடம் பெற்றிருந்தது.

அணை மாதிரி அமைப்பு அமைந்துள்ள அறையின் கூரையில் அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் இருந்து, மழை போல் தண்ணீர் பொழியும் வசதியும் இருந்தது. இவ்வாறு பொழியும் தண்ணீர், மலை போன்ற அமைப்புகள் வழியாக, ஆறுகள் போல் ஓடி வருவதைப் பார்க்க மிகவும் அருமையாக இருக்கும். அணைப் பூங்காவுக்கு வரும் மாணவ, மாணவியருக்கு, இக்காட்சி மிகச்சிறந்த பூகோள பாடமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இந்த அணை மாதிரியை முறையாக பராமரிக்காமல், கைவிட்டு விட்டது பொதுப்பணித்துறை. மரங்களிலிருந்து விழுந்த இலை சருகுகளும், குப்பையும் குவிந்துள்ள இந்த அறையில், என்ன இருக்கிறது என்பதே பலருக்கு தெரியாது. இதனால், பூங்காவுக்கு வரும் பலரும் இப்பகுதிக்கு வருவதுமில்லை.

சமீபத்தில் அணைக்கு வந்த, பவானிசாகர் எம்.எல்.ஏ., சுந்தரம், இங்கு வந்தார். அணை மாதிரியை சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

**கால்நடை வளர்த்தால் நிரந்தர வருமானம்: இணை இயக்குனர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,01:45 IST

அன்னூர் : "கால்நடை வளர்ப்பின் மூலம் நிரந்தர தொடர் வருமானம் பெறலாம்' என, கால்நடை பராமரிப்பு இணை இயக்குனர் தெரிவித்தார்.பொகலூரில் பசு பராமரிப்பு மற்றும் பால் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் கால்நடை பராமரிப்பு துறையின் "ஆத்மா' திட்டம் மூலம் நடந்தது.கால்நடை பராமரிப்புத்துறை கோவை மண்டல இணை இயக்குனர் சண்முகம் துவக்கி வைத்து பேசியது: விவசாய ஒட்டுமொத்த உற்பத்தியில் (ஜி.டி.பி.,) கால்நடை வளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கால்நடை வளர்ப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அன்னூர் வட்டாரத்தில் 4 லட்சத்து 76 ஆயிரம் கோழிகளும், 19 ஆயிரத்து 583 பசு மாடுகளும், 18 ஆயிரத்து 990 வெள்ளாடுகளும், 15 ஆயிரத்து 333 செம்மறியாடுகளும், 3,881 எருமைகளும் உள்ளன. கால்நடை வளர்ப்பதின் மூலம் நிரந்தர தொடர் வருமானம் பெறலாம்," என்றார்.தமிழ்நாடு கால்நடை பல்கலை பேராசிரியர் கிருஷ்ணகுமார் பேசுகையில்,""தீவனத்தில் மக்காச்சோளம் 30 முதல் 40 சதவீதமும், பருத்திக்கொட்டை, சூரிய காந்தி மற்றும் சோயா புண்ணாக்குகளை நிறையவும் தரலாம். ஆனால், தேங்காய் மற்றும் எள்ளுப்புண்ணாக்கு மிக குறைந்த அளவுதான் தர வேண்டும்," என்றார்.கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் அறிவழகன் பேசுகையில், ""பராமரிப்பு வேலை அதிகம், அதிக தீவன தேவை ஆகிய காரணங்களால் எருமை வளர்ப்பு கடந்த ஆண்டை விட ஐந்து சதவீதம் குறைந்துள்ளது. பசு மாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு அதிகரித்துள்ளது. பசுக்களுக்கு ஒரு நாளைக்கு 70 லிட்டர் தண்ணீரும், எருமைக்கு 80 லிட்டரும் தர வேண்டும். சுத்தமான இடத்தில் வைத்து பால் கறக்க வேண்டும். எட்டு நிமிடத்திற்கு மேல் பால் கறக்கக்கூடாது. பால் கறக்கும் முன் கைகளை ஆன்டிசெப்டிக் மருந்தால் கழுவ வேண்டும். அரசு மானிய விலையில் புல் வெட்டும் இயந்திரம் மற்றும் தீவன சிறுதளைகளை வழங்குகிறது. நாளுக்கு நாள் பால் மற்றும் இறைச்சி தேவை அதிகரித்து வருவதால், கால்நடை வளர்ப்பு என்றும் வெற்றி தரும்," என்றார்.

வேளாண் உதவி இயக்குனர் சீனிராஜ் பேசுகையில், ""கால்நடை தீவனங்களை அதிக அளவில் உள்ளூரில் பயிரிடுவதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் குறைந்த விலையில் பெறலாம்," என்றார்.அவிநாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலைய நிர்வாகி ராஜு, கால்நடை டாக்டர் அர்ச்சனா ஆகியோர், தீவன செலவை குறைத்து, அதிக பால் உற்பத்தி செய்ய தேவையான வழிமுறைகளை விளக்கினர். விவசாயிகளுக்கு தாது உப்பு கலவை, உண்ணிகளை அழிக்கும் மருந்துகளை, கால்நடை மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இலவசமாக வழங்கின

வடவள்ளி பேரூராட்சி பணி ஸ்தம்பிப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,01:44 IST

பேரூர் : வடவள்ளி பேரூராட்சியை அதிகாரிகள் புறக்கணித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஒரு மாதமாக, செயல்அலுவலர் நியமிக்காததால் பேரூராட்சி நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளது.கடந்த தி.மு.க., ஆட்சியில் நான்கரை ஆண்டுகளாக, வடவள்ளி பேரூராட்சியின் செயல்அலுவலராக பணியாற்றியவர் சந்திரன். இவர் மீது, பேரூராட்சி கவுன்சிலர்கள் கொடுத்த ஊழல் புகார்களையும் தாண்டி, கடந்த சட்டசபை தேர்தலில் வடவள்ளி பகுதி தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, ஜமீன்ஊத்துக்குளி பேரூராட்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். ஒரு மாதத்துக்கு மேலாகியும், இப்பதவியில் இது வரை யாரும் நியமிக்கப்படவில்லை. இதனால், பொதுமக்களின் பிறப்பு, இறப்புச் சான்றிதழ், கட்டட அனுமதி, வரிவிதிப்பு, பெயர் மாற்றம் உள்ளிட்ட முக்கிய பணிகள் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளன.வடவள்ளி பகுதியில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு, டெண்டர் விடப்பட்ட பணிகளுக்கு ஒர்க்ஆர்டர் தராததால் வளர்ச்சிப் பணிகள் முடக்கம், பேரூராட்சி பகுதியில் சரிவர குப்பைகள் அள்ளாததால் சுகாதார சீர்கேடு என, பேரூராட்சி நிர்வாகம் ஒட்டுமொத்தமாக ஸ்தம்பித்து போயுள்ளது.கன்ஸ்யூமர் காஸ் அமைப்பைச் சேர்ந்த கதிர்மதியோன் கூறுகையில், ""மக்கள்தொகையை கருத்தில் கொண்டு, வடவள்ளியில் பவானி கூட்டுகுடிநீர்த்திட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆனால், குடியிருப்புக்கு செல்லும் இக்குடிநீர்த்திட்ட குழாய்கள், வடவள்ளியில் ஆங்காங்கே உடைந்து தண்ணீர் வீணாகிறது. குடிநீர்வாரிய அதிகாரியுடன், பேரூராட்சி அதிகாரி கூட்டுஆய்வு மேற்கொண்டு, இப்பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும். ஆனால், பேரூராட்சியில், ஒருமாதமாக செயல்அலுவலர் இல்லாததால் அடிப்படை பிரச்னைகளை யாரிடமும் தெரிவிக்க முடிவதில்லை. இளநிலை உதவியாளருமில்லை. சமீபத்தில், துவாரகநாத்சிங் என்பவர், ஒரேநாள் மட்டும் ஆபீசுக்கு வந்து விட்டு, பெரியநாய்க்கன்பாளையம் பேரூராட்சிக்கு இடமாறுதலாகிச் சென்று விட்டார். மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் அதிகாரிகள் புறக்கணிக்கின்றனர்; இதனால் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன,"என்றார். இது தொடர்பாக, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஜெகதீசிடம் கேட்டபோது,""வடவள்ளிக்கு புதிய செயல்அலுவலராக, நாகமுத்து பொறுப்பேற்க உள்ளார்," என்றார்.

**தேயிலை ஏலத்தில் ரூ.2 கோடி தூள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,02:19 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல விற்பனையில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலை தூள் தேங்கியது.நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை ஏல மையத்தின் மூலம் வாரம் தோறும் விற்கப்படுகிறது. இந்தாண்டின் 32வது ஏலத்தில், மொத்தம் 15.33 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது; இலை ரகம் 10.53 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.80 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள் தவிர, வழக்கமாக பங்கெடுக்கும் எகிப்து, ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகர்கள் பங்கேற்கவில்லை.கர்நாடகா, ஆந்திரா, குஜராத், மகாராஷ்டிரா உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் சுமாராக இருந்ததால், விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள 27 சதவீத தேயிலை தூள் தேங்கியது. அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 3 ரூபாய் விலை குறைந்தது.

இந்த ஏலத்தில் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு பயன்படும் ஆர்தோடக்ஸ் ரக தூளுக்கு வழக்கத்தை விட கிராக்கி கூடுதலாக இருந்தது. கடந்த சில மாதங்களாக ஆர்தோடக்ஸ் ரக தூளுக்கு அதிகபட்சம் 180 - 197 வரை மட்டுமே விலை கிடைத்து வந்த நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு சொந்தமானதாக கூறப்படும் கோத்தகிரி கொடநாடு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வந்த ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் விலை கிலோவுக்கு 325 ரூபாய் வரை விலை போயுள்ளது.சிடிசி ரக தூளில், அதிகபட்சம் கிலோவுக்கு 139 ரூபாய் விலை கிடைத்தது. ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் கிலோவுக்கு 325 ரூபாய் விலை கிடைத்தது. இலை ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு கிலோவுக்கு 35 - 40 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 80-130 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 40-45 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 85-135 ரூபாய் விலை கிடைத்தது. வரும் 18,19 தேதிகளில் நடத்தப்படவுள்ள விற்பனை எண் 33க்கான ஏலத்திற்கு, மொத்தம் 12.38 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு உள்ளது.

சத்துணவு ஊழியர்களுக்கு பயிற்சி முகாம்

கூடலூர் : "அரிசியை ஊர வைத்து வேக வைப்பதன் மூலம் விரைவாக சமைக்க முடியும்' என கூடலூரில் நடந்த சத்துணவு ஊழியர்களுக்கான பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.கூடலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமூநலத்துறை மற்றும் சத்துணவு திட்டம் மூலம், சத்துணவு ஊழியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. முகாமை, மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (சத்துணவு) இளம்பரதி துவக்கி வைத்தார். கோவை அவினாசிலிங்கம் ஹோம்

சயின்ஸ் கல்லூரி விரிவுரையாளர் ராதா பயிற்சி வழங்கிய பேசுகையில்,""அரிசியை அதிகபட்சம் மூன்று முறை கழுவினால், அதன் சத்துகள் இழக்க நேரிடம். அரிசியை கழுவி ஊர வைத்து சமையல் செய்தால், விரைவாக சமைக்க முடியும்; எரிபொருள் வீணாவது தவிர்க்கப்படும்.பூ கோஸ் உள்ளிட்ட கிரை வகைகள் கொழுப்பை குறைக்கிறது. கிரையை தனியாக தான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. முட்டையை குளிர்சாதன பெட்டியில் வைப்பதை விட வெளியே வைத்து பயன்படுவதே நல்லது. முட்டையை 5 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்," என்றார். முகாமில், கூடலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஜான்சாமுவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் மற்றும் சத்துணவு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இ.கம்யூ., கிளை கூட்டம்

கோத்தகிரி : கோத்தகிரி மசகல் கிராமத்தில் இ.கம்யூ., கட்சி கிளை கூட்டம் நடந்தது.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: மசகர் அரசு பட்டுப்பண்ணையில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை களைந்து, தேவையான தொழிலாளர்களை நியமிக்கவேண்டும்; இப்பகுதியில் வசித்துவரும் ஆதிவாசி குடும்பங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகி சின்னம்மாள் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலர் ராஜூபெள்ளி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.இதில், செயலராக சாந்தகுமார், துணை செயலராக பாஸ்கரன் மற்றும் பொருளாளராக சின்னம்மாள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகி பாப்பாத்தி நன்றி கூறினார்.

**மரபணு பருத்தி உற்பத்தி ஊக்குவிப்பை கைவிட விவசாய சங்கம் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,01:33 IST

திருவாரூர்: வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடந்த நாளை நினைவு கூறும் வகையில் திருவாரூரில் விவாசயிகள் சங்கம் சார்பில் நடந்த கருந்தரங்கத்துக்கு கூட்டமைப்பு தலைவர் சேரன் தலைமை வகித்தார். நுகர்வோர் பாதுகாப்பு இயக்க மாவட்ட தலைவர் அறிவழகன், பொது செயலாளர் ரமேஷ், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் துரைராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், நுகர்வோர் கூட்டமைப்பு மாநில தலைவர் கலாதரன், அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் சந்திரசேகரன், சேவை சங்க ஒருங்கிணைப்பாளர் வரதாரஜன் உட்பட பலர் பேசினார். இந்திய வேளாண்மையை அடிமைப்படுத்தும் மான்சாண்டோ போன்ற அமெரிக்க கம்பெனிகளை

மத்திய அரசு வெளியேற்ற வேண்டும். இந்திய உழவர்களுக்கு எதிரான 2005 விதை சட்டத்தை மத்திய அரசு கை விட வேண்டும். மான்சாண்டோ கம்பெனியின் மரபனு மாற்று பருத்தியை ஏற்கனவே தர்மபுரி, சேலம், மாவட்டங்களில் சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு அரசு மூலம் இழப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே தற்போதைய அரசின் பட்ஜெட்டில் மரபணு பருத்தி உற்பத்தியை ஊக்குவிப்போம் என்று கூறியுள்ளதை அரசு கைவிட வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வேளாண் விரிவாக்க மையத்தில் விதைகள் இருப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,23:33 IST

காளையார்கோவில் : காளையார்கோவில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதுமான விதைகள் இருப்பு வைத்திருப்பதாக வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கணேசன் தெரிவித்தார். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் ஏடீடி39(ஆடுதுறை), பிபிடி5204(டீலக்ஸ்பொன்னி) ரக விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஒரு கிலோ விதை 5.ரூபாய் வீதம் மானியத்திலும்,விதைக் கிராம திட்டத்தில் 10 டன் விதைகள் 50 சதவீதம் மானியத்திலும், மண்வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரவிதையான "டெயின்ச்சா' 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. "அட்மா' திட்டத்தின் கீழ் நேரடி விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஐ டிசி நிறுவனத்துடன் இணைந்து விதைக்கும் கருவி கொண்டு முழு மானியத்தில் நெல் விதைப்பு செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் நிலத்தினை நன்கு சுத்தப்படுத்தி தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். இது குறித்து காளையார்கோவில் வேளாண் மை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்,' என்றார்.

**அரிய வகை மூலிகை செடிகள்: ஆராய்ச்சிக்காக வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,23:32 IST

காரைக்குடி : ஐம்பதுக்கும் மேற்பட்ட அரிய வகை மூலிகை செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக, செட்டிநாடு மானாவாரி செம்மண் ஆராய்ச்சி நிலைய தலைவர் பி. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது: வறட்சி மாவட்டமான சிவகங்கை,சுற்றுப்பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் விவசாய தொழிலை நம்பி உள்ளனர்.குறிப்பாக, கரும்பு, நிலக்கடலை

பயிர்களை விவசாயிகள் அதிகளவு பயிரிட்டுள்ளனர். தவிர, வறட்சி தாங்கி விளையக்கூடிய உளுந்து (வம்பன் 5 ரக), கால்நடைகளுக்கான தீவன உற்பத்தியை பெருக்கும் வகையில் "கோ-29 ரக' தீவன சோளம்,பயிருக்கு தேவையான பூச்சி கொல்லி மருந்து ஆகியவை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையில், தற்போது வெள்ளை எருக்கு, நொச்சி, ஆடாதொடை, சிறியாநங்கை, துளசி, கருந்துளசி, சர்க்கரை கொல்லி, கரு ஊமத்தை உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட அரிய வகை மூலிகை பயிர்களை வளர்த்து வருகிறோம். இந்த மூலிகையில் எந்த மூலிகை செடிகள் வறட்சியை தாங்கி விளையக்கூடியது எனவும் ஆராய்ச்சி செய்து வருகிறோம். எதிர்காலத்தில், இதுபோன்ற மூலிகைகளை காப்பாற்றும் பொருட்டு இங்கு பயிரிடப்பட்டுள்ளது, என்றார்.

## *நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் பொது பணவீக்கம் 9.22%–ஆக குறைந்தது*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் கடந்த எட்டு மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.22 சதவீதமாக குறைந்துள்ளது. ஜூன் மாதத்தைக் காட்டிலும் (9.44 சதவீதம்) இது 0.22 சதவீதம் குறைவாகும்.*

*பாரத ரிசர்வ் வங்கி*

*அதேசமயம் இந்த பணவீக்கம் பாரத ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள அளவைக் காட்டிலும் அதிகமாகும். இந்நிலையில் மே மாதத்திற்கான பொது பணவீக்கமும் 9.06 சதவீதத்திலிருந்து 9.56 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ரிசர்வ் வங்கி, வரும் செப்டம்பர் 16–ந் தேதி வெளியிடும் பணக்கொள்கை ஆய்வு அறிக்கையில், வங்கிகள் தன்னிடமிருந்து குறுகிய கால அடிப்படையில் பெறும் கடனிற்கான வட்டி விகிதத்தை 8 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதமாக உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஜூலை 30–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம், கடந்த 18 வாரங்களில் இல்லாத அளவிற்கு 9.90 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஜூலை மாதத்திற்கான உணவு பொருள் பணவீக்கம் 8.19 சதவீதமாக உள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள உணவு பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 12.22 சதவீதத்திலிருந்து 11.30 சதவீதமாக குறைந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 12.85 சதவீதத்திலிருந்து 12.04 சதவீதமாக குறைந்துள்ளது.

அதேசமயம் உருக்கு, சிமெண்டு, சர்க்கரை, நுகர்வோர் சாதனங்கள் உள்ளிட்ட தயாரிப்பு பொருள்கள் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 7.49 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது ஜூன் மாதத்தில் 7.43 சதவீதமாக இருந்தது. கடந்த பிப்ரவரி மாதத்திலிருந்து தயாரிப்பு பொருள் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த வேண்டுமானால் பணப்புழக்கத்தை குறைக்க வேண்டும். பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் தயாரிப்பு பொருள் பணவீக்கத்தின் பங்களிப்பு 65 சதவீதமாக உள்ளது. பணவீக்கம் அதிகரிப்பதால் பொது மக்கள் தமது வருமானத்தில் பெரும்பகுதியை உணவு பொருள்களுக்காக செலவிடுகின்றனர். இதனால் இதர பொருள்கள் விற்பனை குறைந்து நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

வட்டி விகிதங்கள்

நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 2010–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரை, பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 11 முறை உயர்த்தி உள்ளது. இந்நிலையில் கடந்த ஜூன் மாதத்தில் நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி நிபுணர்களின் மதிப்பீடுகளையும் விஞ்சி 8.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. வட்டி விகிதத்தை உயர்த்தி உள்ளதால், அதிக பாதிப்பு ஏற்படவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என பொருளியல் வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.

எனவே செப்டம்பர் மாதம் வெளியிடும் ஆய்வு அறிக்கையில் ரிசர்வ் வங்கி, முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தும் என்று பெரும்பாலான நிபுணர்கள் கூறுகின்றனர்.

## தொழிற்சாலைகளில் இருந்து விவசாயிகளுக்கு ஜிப்சம் உப்பு நேரடியாக விநியோகிக்கப்படும் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தகவல்

*சென்னை, ஆக.17–*

*ஜிப்சம் உப்பு தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளில் இருந்தே விவசாயிகளுக்கு நேரடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என்று சட்டசபையில் வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.*

*ஜிப்சம் உப்பு நேரடி விற்பனை*

*சட்டசபையில் நேற்று வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது ஒட்டப்பிடாரம் தொகுதி எம்.எல்.ஏ. டாக்டர் கிருஷ்ணசாமி பேசுகையில், தரமற்ற, கலப்பட உரம் விற்பனை செய்யப்படுவதாக கூறினார்.*

*அப்போது வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் குறுக்கிட்டு பதில் அளிக்கையில், கடந்த ஆட்சியில் தரமற்ற உரம் விநியோகிக்கப்பட்டிருக்கலாம். இனிமேல் அதுபோல தரமற்ற, கலப்படமான உரம் விற்பனை செய்ய அனுமதிக்கமாட்டோம். ஜிப்சம் உப்பை அது தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளில் இருந்து விவசாயிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.*

*விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலை*

*டாக்டர் கிருஷ்ணசாமி தொடர்ந்து பேசும்போது, விவசாய விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.*

*அதற்கு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பதில் கூறுகையில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகள் வெறுமனே பார்வையாளர்களாக இருக்கும் நிலையை மாற்றி, அந்த விற்பனைக்கூடங்களின் 25 சதவீத பங்குதாரர்களாக விவசாயிகளை ஆக்கி இருக்கிறோம். விவசாய விளைபொருட்களுக்கான கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிப்பதில் அவர்கள் முக்கியப் பங்கு வகிப்பார்கள்.*

*சட்டசபையில் நேற்று நடந்த வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில், எம்.எல்.ஏ.க்கள் கலையரசு (பா.ம.க.), சரத்குமார் (ச.ம.க.), ஜவாருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), கதிரவன் (அகில இந்திய பார்வர்டு பிளாக்), அருள்செல்வன் (தே.மு.தி.க.), எஸ்.கே.செல்வம் (அ.தி.மு.க.) ஆகியோர் பேசினர். எம்.எல்.ஏ.க்களின் கருத்துகளுக்கு வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று (புதன்கிழமை) பதில் அளிக்கிறார்.*

## தமிழ்நாட்டில் 'என்டோசல்பான்' பூச்சிக்கொல்லி மருந்துக்கு தடை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவிப்பு

சென்னை, ஆக.17–

தமிழ்நாட்டில் 'என்டோசல்பான்' பூச்சிக்கொல்லி மருந்தை வைத்திருக்கவோ, விற்கவோ கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் சட்டசபையில் அறிவித்தார்.

சட்டசபையில் வேளாண்மைத்துறை மானிய கோரிக்கையின் மீது நடந்த விவாதம் வருமாறு:–

கரும்பு நிலுவை

கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு):–பருத்திக்கு நியாயமான விலை கிடைக்காததால் தான் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் கொண்டுவரும் அனைத்து விளை பொருட்களையும் அரசே கொள்முதல் செய்வதன் மூலமே அவர்களுக்கு உரிய விலை கிடைக்கும். அரசு நிர்ணயிக்கும் விலைக்கு குறைவாக ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கொள்முதல் செய்யும் நிலைமை இருக்கிறது. இதனை தடுக்க வேண்டும். கொப்பரைகளை அரசு கொள்முதல் செய்வதற்கு பதிலாக தேங்காயாகவே கொள்முதல் செய்ய வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு விவசாயிகளுக்கு 3 மாதங்களுக்கு மேலாக பணம் வழங்கப்படாமல் இருக்கிறது.

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்:–கரும்புக்கான நிலுவை தொகைகளை உடனடியாக வழங்க முதல்–அமைச்சர் ஆணையிட்டுள்ளார். அந்த ஆலைகளுக்கு அதற்குரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

என்டோசல்பானுக்கு தடை

கே.பாலகிருஷ்ணன்:–கேரளாவில் என்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்து மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால் அங்கு தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலும் என்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தை விற்கவோ, பயன்படுத்தவோ தடை விதிக்க வேண்டும்.

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்:–என்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்து கேரளாவில் பாதிப்பை ஏற்படுத்தியதால் அங்குள்ள நீதிமன்றம் என்டோசல்பான் பூச்சி மருந்திற்கு தடை விதித்தது. பின்னர் உச்சநீதிமன்றமும் இதனை தடை செய்திருக்கிறது. தமிழ்நாட்டில் என்டோசல்பான் பூச்சிக் கொல்லி மருந்து வைத்துக் கொள்ளவோ,

*விற்கவோ கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.*

*பி.டி.கத்தரிக்காய் சோதனை*

*கே.பாலகிருஷ்ணன்:–பி.டி. கத்தரிக்காயை அனுமதிக்க மாட்டோம் என்று முதல்–அமைச்சர் இங்கு ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆனால் வேளாண் பல்கலைக்கழகத்தில் பி.டி.கத்தரிக்காய் சோதனை செய்யப்படுகிறது.*

*செங்கோட்டையன்:–பி.டி.கத்தரிக்காயை சோதிக்க கூடாது என்று முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.இவ்வாறு விவாதம் நடந்தது.*

## ***திருமூர்த்தி அணைக்கு இன்று தண்ணீர் திறப்பு காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் ஆய்வு***



காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு உள்ள சர்க்கார்பதி மின் நிலையப் பகுதியில் பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் ஆய்வு செய்த போது எடுத்த படம்.

*ஆனைமலை,ஆக.17–*

*பரம்பிக்குளம் அணை யில் இருந்து திருமூர்த்தி அணைக்கு இன்று முதல் தண்ணீர் திறந்து விடப் பட உள்ளது. இதைத் தொடர்ந்து நேற்று தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் ராமலிங்கம் காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணி*

*பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் கீழ் பரம்பிக்குளம் அணையில் இருந்து*

திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்காக காண்டூர் கால் வாய் மேற்கு தொடர்ச்சி மலை யில் சமமட்ட கால்வாயாக வெட்டப்பட்டு உள்ளது. செங்குத்தான பாறைகள் மேல் உருவாக்கப்பட்ட 49.30 கிலோ மீட்டர் கால்வாய் தற்போது ரூ.187 கோடி செலவில் புதுப் பிக்கப்பட்டு வருகிறது. காண்டூர் கால்வாய் தொடங் கும் ஜீரோ பாயிண்ட் பகுதி சர்க்கார் பதியில் உள்ளது.

இந்த காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணிகளை ஆகஸ்டு 15–ந்தேதி முடித்து, செப்டம்பர் 1–ந்தேதி முதல் பி.ஏ.பி. திருமூர்த்தி நீர்த் தேக்கத் திட்டக் குழு 4–வது மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறப் பது என்று பாசன சபை குழு உறுப்பினர்களும், நிர்வாகி களும் முடிவு செய்து உள்ள னர்.

அமைச்சர் ஆய்வு

இந்த நிலையில் நேற்று மதியம் தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் கே.வி. ராமலிங்கம் சர்க்கார் பதி பகுதியில் நடைபெற்று வரும் காண்டூர் கால்வாய் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கண் காணிப்பு பொறியாளர் ரங்க நாதன், உதவி செயற் பொறி யாளர் குழந்தை சாமி, தாமோ தரன், உதவி பொறியாளர்கள் சுப்பிரமணி, முருகேஷன், பொன்னுசாமி, ஜெயக்குமார், ஜெயராமன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறப்பு

இதைத் தொடர்ந்து அமைச் சர் கே.வி.ராமலிங்கம் கூறிய தாவது:–

திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் செல்வதில் காண்டூர் சமமட்ட கால்வாய் முக்கிய பங்காற்றி வருகிறது. தற்போது காண்டூர் கால்வாய் புதுப் பிக்கும் பணி ஜீரோ பாயிண்ட், ஆழியாறு உள் ளிட்ட 3 பகுதிகளில் நடை பெற்று வருகிறது. கடந்த 6 மாதங்களில் 3 பகுதுகளிலும் சேர்த்து 2.5 கிலோ மீட்டர் தூரப் பணிகள் முடிவடைந்து உள்ளது.

17–ந்தேதி(இன்று) முதல் பரம்பிக்குளம் அணையில் இருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. காண்டூர் கால்வாய் பணிகள் 3 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்று ஒப்பந்தம் போடப்பட்டு உள்ளது. எனவே, வரும் ஆண்டில் காண்டூர் கால்வாய் பணிகளை புது வேகத்துடன் தொடங்கி, விரைவில் கால்வாய் நல்ல தரத்துடன் கட்டி முடிக்க முழுவீச்சுடன் செயல்பட வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## *தேவை அதிகரித்ததால், ஜூலை மாதத்தில் ரப்பர் இறக்குமதி 12% உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*இந்தியாவில், ஜூலை மாதத்தில் 20,127 டன் இயற்கை ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட 12 சதவீதம் அதிகமாகும்.*

*இந்தியா 4–வது இடம்*

*சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. எனினும் உற்பத்தியை காட்டிலும் தேவை அதிகமாக உள்ளதால் தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து ரப்பரை இறக்குமதி செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் ஒரு கிலோ ரப்பருக்கு 20 சதவீதம் அல்லது ரூ.20 (இதில் குறைவானதை) வரியாக செலுத்தி இறக்குமதி செய்து கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் ரப்பர் மீதான சுங்க வரி பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.*

*இந்தியாவில் டயர் நிறுவனங்கள் இயற்கை ரப்பரை அதிக அளவில் பயன்படுத்துகின்றன. ஏப்ரல்–ஜூலை மாத காலத்தில் உள்நாட்டில் ரப்பர் பயன்பாடு 4.8 சதவீதம் உயர்ந்து 3.24 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. உற்பத்தி 5.8 சதவீதம் வளர்ச்சி கண்டு 2.38 லட்சம் டன்னை தாண்டியுள்ளது. இதே காலத்தில் ரப்பர் இறக்குமதி 10.4 சதவீதம் அதிகரித்து 62,056 டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் இறக்குமதி 2 லட்சம் டன்னை தாண்டும் என சந்தை வட்டாரங்கள் மதிப்பீடு செய்துள்ளன.*

*அப்பல்லோ டயர்ஸ்*

*அப்பல்லோ டயர்ஸ், ரப்பர் உற்பத்தியில் களம் இறங்குகிறது. இந்தியாவில் ரப்பர் பற்றாக்குறை கடுமையாக உள்ளதால் லாவோஸில் 10,000 ஹெக்டேர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது. அதில் ரப்பர் தோட்டம் ஒன்றை உருவாக்க உள்ளது. எனினும் ரப்பர் பால் வடிக்கும் பணிகளை மேற்கொண்டு பலன் பெற சுமார் ஏழு ஆண்டுகள் ஆகும்.இதன் மூலம் தனது எதிர்கால ரப்பர் தேவையில் 25 சதவீதத்தை பூர்த்தி செய்து கொள்ள இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.*

தினகரன்

## கால்நடை தீவனமாகிறது விளைச்சல் அதிகமானதால் 1 கிலோ தக்காளி ரூ.2 ஆனது

பதிவு செய்த நாள் : 8/17/2011 0:35:22



பாவூர்சத்திரம் : பாவூர்சத்திரம் பகுதிகளில் அதிக விளைச்சல் காரணமாக தக்காளி விலை கிலோ ரூ.2ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. நெல்லை மாவட்டம் பாவூர்சத்திரம் பகுதிகளில் அதிக அளவு தக்காளி உற்பத்தியாகிறது. தற்போது இங்கு மகசூல் அமோகமாக உள்ளது. கடந்த மாதம் கிலோ தக்காளி ரூ.10 வரை விற்பனையானது. பின்னர் படிப்படியாக குறைந்து நேற்று ரூ.2 முதல் ரூ.3 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

தக்காளி பறிக்க ஆண்களுக்கு ரூ.200ம், பெண்களுக்கு ரூ.100ம் கூலி கொடுக்கப்படுகிறது. இதுதவிர போக்குவரத்து செலவு, இறக்கு கூலி, ஏல கமிஷன் என்று விவசாயிகளு க்கு செலவு ஆகிறது. ஆனால், கிலோ ரூ.3 வரை மட்டுமே விற்கப்படுவதால் தொழிலாளர் கூலிக்குகூட இது போதவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர்.

மேலும் கீழப்பாவூர் ஒன்றியத்தில் திப்பணம்பட்டி, நாட்டார்பட்டி, ஆர்யங்காவூர், பூவனூர், அரியபுரம், ஆவுடையானூர் போன்ற தென்பகுதியில் மழையின்றி வறட்சி ஏற்பட்டுள்ள நிலையிலும் விவசாயிகள் சிக்கனமாக நீர்பாய்ச்சி உற்பத்தி செய்த தக்காளிக்கு விலை கிடைக்காமல் வாடுகின்றனர். விலை குறைவாலும், அதிக மகசூல் காரணமாகவும் விற்பனையாகாமலும் தக்காளி தரையில் கொட்டப்பட்டு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.

## பண்டிகை சீசன் தொடக்கம் பூக்கள் விலை கடும் உயர்வு

பதிவு செய்த நாள் : 8/17/2011 0:33:45



ஆரல்வாய்மொழி: தோவாளை பூ மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் கொண்டு வரப்படுகின்றன. ஆடி மாதம் எந்த ஒரு திருமண நிகழ்ச்சியும் இல்லாததால் 1 கிலோ பிச்சி பூ ரூ.50ல் இருந்து ரூ.120 வரையிலும், மல்லிகை பூ ரூ.40ல் இருந்து ரூ.100 வரையும், சம்மங்கி ரூ.10ல் இருந்து ரூ.40 வரையிலும் மற்ற பூக்கள் 1 கிலோ ரூ.10க்கும் குறைவாக விற்பனையானது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். நேற்று ஓணம் பண்டிகை துவக்க நாள் என்பதால் தோவாளை மார்க்கெட்டில் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. நேற்று முன்தினம் ரூ.150க்கு விற்ற பிச்சி பூ, நேற்று கிலோ ரூ.600, மல்லிகை ரூ.100ல் இருந்து ரூ.500 என உயர்ந்தது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.